Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 73/2022

**2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 12 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திரு. சரவணன் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 12 | தொழில் | - | காவல் ஆய்வாளர் |
| பெயர் | - | மகேஸ்வரி | வட்டம் | - | சேலம் |
| க/பெ | - | சிவக்குமார் | சமயம் | - | |
| கிராமம் | - | சேலம் | வயது | - | 44 |
| சாதி | - | | | | |

| | |
|---|---|
| நாள் ( Dated): 14-03-2024 | |
| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
| இடம் ( Venue) | - நீதிமன்ற காணொலி அறை. வால்பாறை |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், வால்பாறை |
| இந்த வழக்கில் வழக்கறிஞர்கள் | அரசுக்காக – திரு. K. சிவஞானம் ., அரசு உதவி வழக்கறிஞர், நிலை-1 |
| | எதிரிக்காக திருமதி.வனிதா ரோஸி, வழக்கறிஞர், |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE PONIT)** | |
| இடம் ( Venue) | நீதிமன்ற காணொலி அறை. சேலம் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | ஜெயசந்திரன், மொழிபெயர்ப்பாளர், (II ADJ Court, Salem.) |
| சாட்சி ( Witness) | மகேஸ்வரி - அ.சா. 12 |

சாட்சி மாவட்ட நீதிமன்றம், சேலம், நீதிமன்ற காணொலி அறைக்கு வரவழைக்கப்பட்டு நீதிமன்ற காணொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறது.

**(1, 2 எதிரிகள் ஆஜரில்லை. 1, 2 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது)**

முதல் விசாரணை:

1. நான் தற்போது சேலம் அரசு மருத்துவமனை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 19.06.2020- ஆண்டு வால்பாறை காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தபோது காடம்பாறை காவல் நிலைய குற்ற எண் 12/2020, இதச சட்டப்பிரிவுகள் 427, 457, 380 மற்றும் 120(b) வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்து வழக்குக் கோப்பினை பார்வையிட்டதில் வாதியான திரு. கே.கே. ரவி என்பவர் 21.05.2020-ம் தேதி கொடுத்த புகார் மனுவினை கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் சட்ட ஆலோசகரிடம் கருத்துரை பெற்று அதன் அடிப்படையில் 18.06.2020-ம் தேதி மாலை 16.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி வழக்கினை விசாரணைக்கு 19.06.2020-ம் தேதி காலை 10.00 மணிக்கு சம்பவயிடம் சென்று வாதியான கே.கே.ரவி என்பவர் சம்பவயிடத்தை அடையாளம் காட்ட அங்கிருந்த சாட்சிகளான முரளி, பாபுகுட்டி என்பவர்கள் முன்னிலையில் ஒரு மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் மற்றும் வரைபடம் முறையே அ.சா.ஆ. 11, 12 ஆகும்.**

3. சாட்சிகள் கே.கே.ரவி, பாபுகுட்டி, முரளி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாதி கொடுத்த புகார் மற்றும் இடம் சம்பந்தமாக நிறைய புகார்கள் வந்ததால் அந்த இடம் யாருக்குச் சொந்தமனதை அறிய வருவாய் துறையினருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதனடிப்படையில் விஜய் அமிர்தராஜ் கிராம நிர்வாக அலுவலர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் ஒரு கடிதம் கொடுத்தார். காடம்பாறை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தலனார் எஸ்டேட் 1/3 பி, ஆர்கே பிளாண்டேஷன் என்ற பெயரிலுள்ள கூட்டாண்மை நிறுவனத்தின் சொத்துக்களை 4 பேருக்கு மேல் உரிமைக் கோரி பல்வேறு சிவில் வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் தீர்ப்பு வரும்வரை யார் உரிமையாளர் என சான்று வழங்க இயலாது என கருத்துரை தெரிவித்து எழுத்து மூலமாக விளக்கம் கொடுத்தார்.

4.அதற்கு பின்னிட்டு திருப்பூர் மாவட்ட பதிவாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தும் அதனடிப்படையில் 29.07.2020-ம் தேதி திரு.ராமசாமி மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) திருப்பூர் என்பவர் காடம்பாறை காவல் நிலைய சரகம் தலனார் எஸ்டேட் 1/3B காலையில் கூட்டமைப்பு நிறுவனத்தின் பதிவெண் 1908/1990 -ன்படி தற்போதைய பங்குதாரரர்கள் 1. Z.K. EIPE, 2. K.A.IYPE மற்றும் 3.MAYAPHILIP என்று உள்ளதாக தெரிவித்து பதில் கொடுத்துள்ளார்.

5. அதன் பின்னிட்டு கனம் குற்றவியல் நீதித்துறை நீதிபதி அவர்களுக்கு கண்டெய்னரை சோதனை செய்ய அனுமதி கேட்டு வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளேன். அதன்பிறகு 16.12.2020-ல் சோதனை செய்ய தபால் வாங்கினேன். பல்வேறு காரணங்களால் VAO -வை அழைக்க வேறு பணி இருந்ததாலும், கொரோனா காலம் என்பதாலும் அவரால் வர இயலவில்லை என தெரிவித்தார்.

6. அதன் பின்னிட்டு பணி மாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்பினை அப்போதைய

ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

**1.** நீதிமன்றத்தில் இருந்து எனக்கு 16.12.2020-ல் சோதனை செய்ய உத்தரவு வந்தது. அந்த உத்தரவை உடனே நிறைவேற்ற முடியவில்லை என நீதிமன்றத்திற்கு அறிக்கை கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. கே.கே. ரவி மற்றும் முருகன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் நான் கே.கே. ரவியை மட்டுமே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். அ.சா.2 முருகனை விசாரிக்கவே இல்லை.

2. அரசு தரப்பு வாக்குமூலங்களில் அ.சா. 2 முருகனின் பெயரும் உள்ளது என்றால் சரிதான். கே.கே.ரவி என்பவரை எத்தனை முறை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளீர்கள் என்றால் 19.06.2020. என்னிடம் உள்ள வாக்குமூலத்தில் நான் 19.08.2020-ல் கே.கே.ரவி மற்றும் முருகனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாக உள்ளது என்றால் சரிதான்.

3. இந்த வாக்குமூலங்கள் அனைத்தும் கண்மூடித்தனமாக எங்கள் காவல் நிலையத்தில் காவலர் தயார் செய்ததில் நான் கையெழுத்து மட்டும் இட்டுள்ளேன் என்றால் தவறு. இந்த வழக்குச் சம்பவம் கொரோனா கால ஊரடங்கு சமயத்தில் நடந்ததாக நான் தெரிந்துகொண்டேனா என்றால் சரிதான்.

4. தலனாருக்கு செல்ல கவர்கல்லை தாண்டி ஒரு வன சோதனை சாவடி உள்ளது அதை தாண்டி தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். அதை கடந்துபோகும் வாகனங்களின் பதிவெண்ணை பதிவு செய்த பிறகுதான் அந்த வாகனங்களை அனுப்பி வைப்பார்கள் என்றால் சரிதான். தெரிந்த வாகனங்களை அவ்வாறு செய்வதில்லை.

5. அந்த வனச்சோதனை சாவடியில் இருந்த வனக்காவலர் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டப்பட்டுள்ள சான்று பொருட்களை ஒரு வாகனம் இல்லாமல் தனிநபரால் எடுத்துச் செல்லமுடியாது என்றால் சரிதான்.

6.அ.சா.1 கே.கே. ரவி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் யாருக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். அ.சா. 1 எனது விசாரணையில் மேற்படி பூமியை குத்தகைக்கு எடுத்துள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் எதுவும் வாங்கி பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 எனது விசாரணையில் காணாமல் போன சிலிண்டர் எந்த நிறுவனத்தை சார்ந்தது என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. நான் விசாரணை செய்த பார்வை மகஜர் சாட்சி முரளி, பாப்புகுட்டி ஆகியோர் எனது விசாரணையில் பார்வை மகஜரில் மாலையில் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் அது தவறுதலாக காலை என்பதற்கு பதிலாக மாலை என்று போடப்பட்டுள்ளது.

8. நான் விசாரணை செய்த பார்வை மகஜர் சாட்சி முரளி, பாப்புகுட்டி ஆகியோர் எனது விசாரணையில் காணாமல் போன பொருட்கள் ரெஜிகுரியனுக்கு சொந்தமானது என்று சொல்லியுள்ளாரா என்றால் சரிதான். அ.சா.3 விஜய் அமிர்தராஜ் எனது விசாரணையில் சம்பவம் நடந்த இடமானது ஆர்கே பிளாண்டேஷன் என்ற கூட்டாண்மை நிறுவனத்திற்கு சொந்தமானது என்று சொல்லியுள்ளாரா என்றால் சரிதான்.

9. அந்த சாட்சியிடம் நான் கேட்ட கேள்வி அந்த இடத்திற்கான உரிமையாளர் யார் குறிப்பிட்டு நேரடி பதில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.3 தனது அறிக்கையில் யாரெல்லாம் உரிமைக்

கோருகிறார்கள் என்ற விவரத்தை குறிப்பிட்டுதான் கொடுத்துள்ளாரா என்றால் சரிதான்.

10. உரிமையாளர் என்பதும் குத்தகைதாரர் என்பதும் வெவ்வேறு பொருட்கள் அடங்கிய சொற்கள் என்றால் சரிதான். அ.சா.10 ராமசாமி, மாவட்ட பதிவாளர் கூட்டாண்மை நிறுவனத்தின் விவரங்களை (Extract)தரவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமான கோப்புகளை எப்போது பின்னால் வந்த ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றால் ஜுலை கடைசி 2021.

11. பார்வை மகஜர், வரைபடம் எல்லாம் எங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் விசாரித்ததாக சொல்லப்படும் சாட்சிகள் நான் சொன்ன தேதியில் என்னால் விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.